## இந்து சமயம் - சைவமும் வைணவமும்

GROUP-VIII வாராந்திரத் தேர்வு : 04 நாள்: 17.03.2017

1. பொருத்துக.

| | | | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. தொகை அடியார்கள் | - a. உயர்வான | (A) | a | b | c | d | e |
| 2. பரமோத்ஸவம் | - b. சிருஷ்டி | (B) | a | b | d | c | e |
| 3. மஹா | - c. பெரிய திருவிழா | **(C)** | **d** | **c** | **e** | **a** | **b** |
| 4. உத் | - d. திருவிழா | (D) | d | c | a | e | b |
| 5. ஸவ | - e. பெரிய | | | | | | |

2. கொடியேற்றத்திற்கு முன் நடத்தப்படும் முக்கியமான விழா

(A) சிவன் பார்வதி விழா (B) ஆதிகடவுள் ஆராதனை (C) விநாயகர் விழா (D) கணபதி ஹோமம்

3. திருவிழாவில் முக்கியமாக நடத்தப்பட வேண்டிய கிரியை எத்தனை

(A) 9 **(B) 18** (C) 48 (D) 4

4. பொருத்துக.

| | | | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சிருஷ்டி | - a. அழித்தல் | **(A)** | **b** | **e** | **a** | **c** | **d** |
| 2. ஸ்திதி | - b. உண்டாக்கல் | (B) | b | e | c | a | d |
| 3. சம்ஹாரம் | - c. மறைத்தல் | (C) | c | e | b | a | d |
| 4. திரோபவம் | - d. அருளல் | (D) | c | e | a | a | d |
| 5. அனுக்கிரகம் | - e. காப்பாற்றுதல் | | | | | | |

5. துவ்ஜாரோகணம் என்பது என்ன?

(A) பவனி வருதல் (B) திருமுழுக்கு நடத்துதல் **(C) கொடியேற்றம்** (D) சம்ஹாரம் செய்தல்

6. 'கொடிக்கவி' என்னும் நூலில் கொடியேற்று விழா தத்துவத்தை விளக்கியுள்ளவர் யார்?

**(A) உமாபதி சிவாச்சாரியார்** (B) அருணகிரி நாதர் (C) அகத்தியர் (D) சிவனந்தி முனிவர்

7. சிவாலயங்களில் ஏற்றும் கொடியில் உள்ள ------------ தர்ம உருவமாகவும் ஆத்மாவின் உருவமாகவும் மதிக்கப்படுகின்றது

**(A) ரிஷபம்** (B) தனுசு (C) மகரம் (D) மேஷம்

8. மண் எடுத்தல், முளையிடுதல், கொடியேற்றம் முதலியவைகள் எதை உணர்த்துகின்றன?

(A) காக்கும் தொழிலை உணர்த்துகின்றன **(B) படைத்தல் தொழிலை உணர்த்துகின்றன**

(C) மறைத்தல் தொழிலை உணர்த்துகின்றன (D) உண்ணா விரதத்தை உணர்த்துகின்றன.

Kalai IAS Academy
சாதனையாளர்களின் சரித்திர கூடம்

9. வாகன உத்ஸவங்கள், யாகம், பலியிடுதல் முதலியன எதைக் குறிக்கின்றன?

**(A) காத்தல் தொழிலைக் குறிக்கும்** (B) அழித்தல் தொழிலைக் குறிக்கும்

(C) அருளல் தொழிலைக் குறிக்கும் (D) மறைத்தல் தொழிலைக் குறிக்கும்

10. திருவிழா காலங்களில் முதல் நாள் இரவு மரத்தடியில் சிவபெருமான் வீற்றிருப்பதாக விளக்கும் விருட்ச வாகனம் எழுந்தருளும் இதை எவ்வாறு அழைப்பர்

(A) வில்வ இழை மரத்தடியில் வீற்றிருக்கும் கோலம் (B) இலயக்கிரம கோலம்

(C) விருத்திக்கிரம கோலம் **(D) விருத்தி கிராம சிருஷ்டி கோலம்**

11. பத்து நாள் திருவிழா காலங்களில் 'விருத்திக்கிரமஸ்திதிக் கோலம்' என்பது என்ன?

(A) மரத்தின் அடியில் சிவன் வீற்றிருப்பது

**(B) இரண்டாவது நாள் காலை சூரியப் பிரயை, மாலை சந்திர பிரயை**

(C) அதிகாரம் நந்தி ஆதிக்கம் செலுத்துதல்

(D) சந்திரன் வெளிச்சத்தை கொண்டு வணங்குதல்

12. "வந்திறை யடியில் வாழும் வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரம் படையால் தாக்கி" – பாடியவருடைய நூல் எது?

**(A) திருவிளையாடற் புராணம்** (B) கொடிக்கவி

(C) கந்த புராணம் (D) சிவனின் புராணம்

13. தர்மம் என்ற அறத்தையே நான்கு கால்களாய் கொண்டுள்ளது. அது சமம், விசாரம்,சந்தோஷம், சாதுசங்கம், என்ற நான்கு அறங்களும் நான்கு கால்களாய் அமைந்துள்ளன. இது இறைவனது எவ்வகை கோலம்?

(A) ஸ்திதி **(B) அனுகிரகம்** (C) சம்ஹாரம் (D) திரோபவம்

14. "எடுத்தனன் எயிற்கயிலை இலங்கையர் மன்னன்" என்று பாடியவர்

(A) சம்பந்தர் (B) திருமூலர் **(C) நாவுக்கரசர்** (D) சுந்தரர்

15. சிவனுடைய பத்துநாள் திருவிழாக்களை எவ்வாறு அழைக்கலாம்?

**(A) முதல் ஐந்துநாள் விருத்திகிரம் ஐந்தொழில்கள் பிற்பகுதி ஐந்துநாள் இலயக்கிரம ஐந்தொழில்கள்**

(B) கொடியேற்றம் முதல் உலாவரும் வரை

(C) கொடியேற்றம் துவங்கி ஐந்து தொழில்களின் (காத்தல், மறைத்தல், படைத்தல், அருளல், அழித்தல்) போன்றவைகளை குறிக்கும் திருவிழாக்கள்

(D) முதல் ஐந்து நாள் விருத்திகிரம கோலம்

16. சிவம் சக்தி தன்னையீன்றும், சக்திதான் சிவத்தை ஈன்றும் பாடியவருடைய நூல்

**(A) சிவஞான சித்தியார்** (B) இருபா இருபது (C) உண்மை விளக்கம் (D) கொடிக்கவி

17. ஆவணிமாதம் அமாவாசை கழிந்த நான்காம் நாள் சதுர்த்தியன்று என்ன விழா நடைபெறும்?

(A) ஆவணி அவிட்டம் விழா **(B) விநாயகர் சதுர்த்தி விழா**

(C) அம்பாள் தரிசனம் (D) திருக்கலியாண விழா

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

18. இறைவனிடத்திலிருந்து முதற்கண் தோன்றிய ஒலியே ஓங்காரமாகும். ஆதலின் அவரை வழிபட்டு இடர்களைந்து இன்புறுகின்றனர். சிவபெருமானை வழிபடுவோரது இடர்களையவே இவரை இறைவன் தோற்றுவித்தான் யார் அவர்?

**(A) முருகன்** (B) சக்தி (C) விநாயகர் (D) வருணன்

19. நவராத்திரி விழா எப்போது வரும்?

**(A) புரட்டாசி அமாவாசைக்கு பின் வரும் 9 நாட்கள்** (B) புரட்டாசி அமாவாசைக்கு முன் வரும் 9 நாட்கள்

(C) புரட்டாசி பௌர்ணமிக்கு முன் வரும் 9 நாட்கள் (D) புரட்டாசி பௌர்ணமிக்கு பின் வரும் 9 நாட்கள்

20. நவராத்திரி விழா பொருத்துக.

| | | | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|
| 1. முதல் மூன்றுநாள் விழா | - a. சரஸ்வதி தேவி | (A) | b | a | b |
| 2. இரண்டாவது மூன்று நாள் விழா | - b. பார்வதி தேவி | **(B)** | **b** | **c** | **a** |
| 3. மூன்றாவது மூன்று நாள் விழா | - c. லட்சுமி | (C) | c | a | b |

21. "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" - பாடியவர்?

**(A) லட்சுமியை பேயாழ்வார் பாடினார்** (B) லட்சுமியை திருமங்கையாழ்வார் பாடினார்

(C) லட்சுமியை ஆண்டாள் பாடினார் (D) லட்சுமியை நம்மாழ்வார் பாடினார்

22. நவராத்திரி முதல் மூன்று நாள் விழாவில் பராசக்தியை எதற்காக வணங்குகின்றோம்.

**(A) பார்வதியின் நிறம் பச்சை (ம) நீலம், ஞானசொரூபி செழுமையும் வளமையையும் குறிக்கின்றது அதற்காக**

(B) பார்வதியின் நிறம் மஞ்சள், சக்திதேவி, வீரத்தையும் விவேகத்தையும் குறிக்கின்றது அதற்காக

(C) பராசக்தியின் நிறம் கருமை (ம) நீலம், வீரத்திருமகள் அரக்கர்களை அழித்து மக்களை காத்ததற்காக

(D) பார்வதியின் நிறம் பச்சை (ம)நீலம், ஞானசொரூபி வீரத்தையும், சக்தியையும் குறிக்கின்றது அதற்காக

23. கந்த விரத விழாக்கள் எத்தனை?

**(A) 3** (B) 4 (C) 5 (D) 7

24. "வெள்ளி நாள் விரதந்தானே விண்ணவர் உலகை காத்த" - என்று வெள்ளிநாள் விரதத்தை பாடியவர்

**(A) கந்தபுராணத்தின் ஆசிரியர் கச்சியப்பர்** (B) திருவிளையாடற்புராணம்

(C) சிவஞான சித்தியார் (D) உமாவதி சிவம்

25. தைப்பூசத் திருவிழா கொண்டாடப்பெறும் தலங்கள் எவை?

(A) பழனி, திருச்சிற்றம்பலம் (B) பழமுதிர்சோலை, மதுரை

(C) திருத்தணி, திருவிடைமருதூர் **(D) மதுரை, திருவிடை மருதூர்**

26. மாசிமாதம் பௌர்ணமியன்று மகம் நட்சத்திரத்தில் மாசிமக விழா கொண்டாடப்பெறும். சில இடங்களில் இறைவன் ----------- தீரத்துக்குச் சென்று வருவதுண்டு

(A) ஆற்று தீரம் **(B) சமுத்திர தீரம்** (C) குளத்தில் உள்ள தீரம் (D) கங்கை தீரம்

27. வைகாசி மாதம் பௌர்ணமி விசாக நட்சத்திரத்தில் வைகாசி விசாகம் விழா நடைபெறும். இவ்விழா முக்கியமாக நடைபெறும் ஊர் எது?

(A) திருப்பாதிரிப்புலியூர், திருத்தணி (B) திருச்சிற்றம்பலம், திருக்கோவிலூர்

(C) பழனி, திருச்செந்தூர் **(D) திருப்பாதிரிப்புலியூர், திருச்செந்தூர்**

Kalai IAS Academy சாதனையாளர்களின் சரித்திர கூடம்

28. ஆனி மாதத்தில் நடக்கும் விழா ஆனித்திருமஞ்சனம் இவ்விழா சிதம்பரம் திருப்பெருந்துறை முதலிய இடங்களில் நடைபெறும். எந்த நட்சத்திரத்தில் நடைபெறும்?

(A) உத்திராடம் **(B) உத்திரம்** (C) பூரம் (D) சித்திரை

29. ஒவ்வொரு மாதங்களில் வளர்பிறை, தேய்பிறை காலங்களில் வரும் விரதம் எவ்வாறு அழைக்கப்படுகிறது? (திரயோதசி காலங்களில்)

**(A) பிரதோஷம்** (B) சஷ்டி (C) கிருத்திகை (D) கார்த்திகை

30. திருவாதிரையை எவ்வாறு பிரிக்கலாம்

(A) திரு + ஆதி + திரை (B) திரு + ஆநி + திரை **(C) திரு + ஆ + திரை** (D) திரு + ஆதி + ரை

31. பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில் “வேலின் நோக்கிய விளக்க நிலையும்” என்று பாடியுள்ளார். இது எதைக் குறிக்கின்றது?

(A) தீபாவளி திருநாள்

**(B) கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு**

(C) ஐப்பசி மாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று ஏற்றிய விளக்கு

(D) கார்த்திகை விரதம்

32. ஓங்கார வடிவமான கடவுள்

(A) முருகன் (B) சிவன் **(C) விநாயகர்** (D) எதுவுமில்லை

33. “ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்பு வர்தம் கை” என்னும் பாடல் குறிப்பிடும் கடவுள்

(A) சிவன் (B) திருமால் (C) பிரம்மன் **(D) விநாயகர்**

34. பாண்டிய மன்னன் நெடுமாறனது சுரநோயைத் தீர்த்தவர்

(A) நாவுக்கரசர் **(B) ஞானசம்பந்தர்** (C) திருமூலர் (D) மாணிக்கவாசகர்

35. கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடலிலிருந்து கரையேறியவர்

**(A) நாவுக்கரசர்** (B) சுந்தரர் (C) மாணிக்கவாசகர் (D) ஞானசம்பந்தர்

36. சுந்தரர் பிறந்த ஊர்

(A) திருப்புகலூர் (B) திருநாவலூர் (C) திருப்பெருந்துறை (D) சீர்காழி

37. திருவாதவூரில் பிறந்த சமய குரவர்

**(A) மாணிக்கவாசகர்** (B) திருநாவுக்கரசர் (C) ஞானசம்பந்தர் (D) சுந்தரர்

38. சிவனின் திருநாமம் எத்தனை எழுத்தால் ஆனது?

(A) 4 (B) 3 (C) 2 **(D) 5**

39. திருக்கையிலாயத்தில் வீற்றிருப்பவர்

(A) முருகன் (B) விநாயகர் **(C) சிவன்** (D) திருமால்

40. மலயத்துவசபாண்டியனின் அருமை புதல்வி

**(A) உமாதேவி** (B) லட்சுமி (C) சரஸ்வதி (D) காரைக்கால் அம்மையார்

41. உமையம்மையாள் திருமுலைப்பால் உண்டவர்

(A) திருமூலர் (B) திருவள்ளுவர் (C) திருநாவுக்கரசர் **(D) ஞானசம்பந்தர்**

42. சகலகலாவல்லிமாலை என்னும் நூலை எழுதியவர்

(A) அப்பர் **(B) குமரகுருபரர்** (C) ஒட்டக்கூத்தர் (D) ஜெயங்கொண்டார்

43. "வாழ்க அந்தனர் வானவர் ஆனினம்

வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக" என்ற கூற்று யாருடையது?

**(A) சம்பந்தர் தேவாரம்** (B) திருநாவுக்கரசர் தேவாரம்

(C) சுந்தரர் தேவாரம் (D) எதுவுமில்லை

44. "வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்

கோன முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க" என்ற பாடல் இடம்பெற்ற நூல்

(A) சிவபுராணம் (B) பெரியபுராணம் (C) தேவாரம் **(D) கந்தபுராணம்**

45. திருப்புகழ் என்ற நூலை எழுதியவர்

**(A) அருணகிரிநாதர்** (B) கம்பர் (C) குமரகுருபரர் (D) சேக்கிழார்

46. "பெண்ணாள் அலியெனும் பெற்றயன் கான்க" என கூறும் நூல்

(A) தேவாரம் **(B) திருவாசகம்** (C) பெரியபுராணம் (D) திருவிளையாடற்புராணம்

47. இந்துக்கள் பிறப்பதற்கு முன்னும் பிறந்து வாழும் காலத்திலும் இறந்த பிறகும் சடங்குகள் விதிக்கப்பட்டுள்ளன. இச்சடங்கினை ------------ என்றும் கூறுவர்

(A) நாமகரணம் (B) நிர்மானம் (C) **கிரியை** (D) ஜாதகர்மம்

48. அதிகம் மந்திரம் கலவாமல் செய்யும் சடங்கிற்கு ------------- என பெயர்

**(A) சோடாசஸெம்ஸ்காரங்கள்** (B) பும்ஸவனம்

(C) கிரியை (D) நாமகரணம்

49. ஒரு பெண் கருக்கொண்ட 3-ம் மாதத்தில் எவ்வித ஊறும் தன் கர்ப்பத்திற்கு உண்டாகாதவாறு வேண்டல் எவ்விதமான பிரார்த்தனை

(A) ஜாதகர்மம் (B) நாமகரணம் (C) நிர்மானம் **(D) பும்ஸவனம்**

50. குழந்தை பிறந்தவுடன் செய்ய வேண்டிய கிரியை?

**(A) ஜாதகர்மம்** (B) நாமகரணம் (C) புண்ணியாவாசனம் (D) நிஷ்க்ராமணம்

51. நாமகரணம் என்பது

(A) குழந்தைக்கு பெயர் சூட்டுதல்

(B) நட்சத்திர முறைப்படி பெயர் வைத்தல்

**(C) தந்தையின் தந்தை பெயரையோ, தாயின் தாய் பெயரையோ சூட்டுவது**

(D) கடவுள்களின் பெயர்களை சூட்டுவது

52. பிறந்த குழந்தையை வீட்டை விட்டு வெளியே கொண்டு செல்வதற்கு எந்தவிதமான சடங்கு முறை

(A) புண்ணியா வாசனம் (B) அன்னப் பிராசனம்

(C) நாமகரணம் **(D) நிஷ்க்கரா மணம்**

53. நவராத்திரி விழா முடிவான விஜயதசமியிலோ அல்லது வேறு நல்ல நாளிலோ குழந்தையை பள்ளிக்கு அனுப்புவது

(A) நிஷ்கராமணம் (B) அன்னப் பிராசனம் **(C) வித்யா ரம்பம்** (D) நாமகரணம்

54. கர்ண பூஷணம் என்பது

(A) ஸிமந்தம் (B) மணவிழா **(C) காதுகுத்தல்** (D) பெயர் சூட்டும் விழா

55. உபநயனம் அல்லது பூனூல் விடுதல் குழந்தைக்கு ஏழு வயதில் செய்ய வேண்டும். இதில் முக்கிய அம்சமாக உள்ள மந்திரம்

**(A) காயத்ரி மந்திரம்** (B) நிர்மானக் கொள்கை (C) மூலமந்திரம் (D) பும்ஸவனம்

56. முளையிடுதல் அல்லது அங்குரார்ப்பணம் என்பது

(A) நவதானியங்களை மண்பாலிகைகளில் இடுதல்

**(B) செந்நெல், பயிறு, எள்ளு, வெண்கடுகு, உளுந்து, மொச்சை 12 மண்பானைகளில் இட்டு வளர்க்க வேண்டும்.**

(C) பச்சைப்பயிறு, நெல், கோதுமை, கொள் இவற்றை முளையிடுதல்

(D) சுண்டல், கம்பு, கேழ்வரகு இவற்றை முளையிடுதல்

57. கும்ப பூஜை என்பது

**(A) கும்பத்தில் உள்ள நீர் வழியாக கடவுளை வழிபடுவது**

(B) கும்பத்தை சுற்றி அலங்காரம் செய்வது

(C) கும்பத்தில் உள்ள நீரை இறைவனுக்கு படைப்பது

(D) குடத்தில் நீரை எடுத்து வருதல்

58. திருமங்கல நாண்பூட்டல் என்றால் என்ன?

(A) திருமணத்தில் திருமங்கல நானை (மஞ்சள் கயிறு) கட்டுதல்

**(B) பெரியோர்களின் ஆசிர்வாதத்திற்கு பின் சகோதரியின் உதவியோடு திருமங்கல நானை கழுத்தில் பூட்டுதல்**

(C) பெரியோர்களின் ஆசிர்வாதத்திற்கு பின் தாயின் உதவியோடு மணமகளின் கழுத்தில் நானை பூட்டுதல்

(D) ஆச்சாரியன் கொடுத்தவுடன் நானை பூட்டுதல்

59. பெற்றோரிடத்து நன்றி செலுத்துவதன் பொருட்டு அவர்கள் உடல்நலம் குன்றாது திடம்பட்ட நலத்துடன் நீடித்து வாழ எவ்விதமான சடங்கை செய்வர்?

**(A) சஷ்டி அப்த பூர்த்தி (அறுபதாம் ஆண்டு நிறைவு விழா)**

(B) ஆசிர்வாதம் வாங்குவதற்கான விழா

(C) சதாபிடேகம்

(D) அந்தியேட்டி

60. சைவ சித்தானந்த சாத்திரங்கள் 14ல் சிறந்தது

(A) சிவஞான சித்தியார் **(B) சிவஞான போதம்**

(C) திருவருட்பயன் (D) கொடிக்கவி

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

61. சந்தானக் குரவர்களின் எண்ணிக்கை : 4

அவர்கள்:

1. மெய்கண்ட தேவநாயனார்
2. அருநந்தி சிவாச்சாரியார்
3. மறைஞான சம்பந்தர்
4. உமாபதி சிவாச்சாரியார்

**(A) I, II சரி** (B) II மட்டும் சரி (C) I, II தவறு (D) I மட்டும் சரி

62. 'சங்கட்பா நிராகரணம்' நூலின் ஆசிரியர்

**(A) உமாபதி சிவம்** (B) மணவாசங்கடந்தார்

(C) அருநந்தி சிவாச்சாரியார் (D) தேவநாயனார்

63. சிவஞான போதத்தில் பாசத்தின் சிறப்பிலக்கணத்தை கூறும் சூத்திரம்

**(A) 4** (B) 5 (C) 6 (D) 7

64. சிவஞான போதத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

**(A) 12** (B) 14 (C) 16 (D) 18

65. மகாபலிபுரத்தில் குருக்கத்தி மலரில் தோன்றியவர்

(A) பொய்கையாழ்வார் **(B) பூதத்தாழ்வார்** (C) பேயாழ்வார் (D) திருமழிசை ஆழ்வார்

66. விஷ்ணுவின் அவதாரங்கள்

(A) 40 (B) 30 (C) 20 **(D) 10**

67. கோயில் விமானங்களின் வகைகள்

(A) 2 **(B) 3** (C) 4 (D) 5

68. குறள் வெண்பாக்களால் ஆன நூல்

**(A) திருவருட்பயன்** (B) கொடிக்கவி (C) நெஞ்சு விடு தூது (D) சங்கற்ப நிராகரணம்

69. கொடுக்கப்பட்ட கூற்றுக்களை கவனிக்கவும்.

I. சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மையை கூறும்

II. இவை பதி, பசு, பாசம் எனக் கூறப்படும்

III. இவை முறையே இறை, உயிர், தளை என காணப்படும்

IV. தளை - ஆணவம், கன்மம், மாயை என 3 வகைப்படும்

(A) I மட்டும் சரி (B) I, II சரி (C) I, II, III சரி **(D) அனைத்தும் சரி**

70. அன்பிற்கு அடிப்படையாக இருப்பது

(A) கடவுள் (B) பாசம் **(C) அஹிம்சை** (D) அருள்

71. சைவ சித்தானந்தத்தின் படி மாயைகளின் எண்ணிக்கை

**(A) 2** (B) 4 (C) 6 (D) 8

72. சைவ சித்தாந்த கருத்துகள் மிகுந்து காணப்படும் தமிழ் இலக்கியம்

**(A) சிலப்பதிகாரம்** (B) மணிமேகலை (C) பெரியபுராணம் (D) A & B

73. ‘இருக்’ என்பதின் பொருள்

(A) மிதத்தல் **(B) துதித்தல்** (C) அமிழ்தல் (D) மண்டியிடுதல்

74. நாயன்மார்களின் எண்ணிக்கை

(A) 64 **(B) 63** (C) 72 (D) 12

75. தமிழ்நாட்டில் காணப்பெறும் குடைவரைக்கோயில்களுள் மிகவும் பழமையானது?

**(A) கி.பி.6ம் நூற்றாண்டு பிள்ளையார்பட்டி** (B) கி.பி.7ம் நுற்றாண்டு பிள்ளையார்பட்டி

(C) கி.பி.8ம் நூற்றாண்டு பிள்ளையார்பட்டி (D) கி.பி.9ம் நூற்றாண்டு பிள்ளையார்பட்டி

76. கோயில்களில் கோபுரம் அமைத்தல் யாருடைய காலத்தில் தொடங்கியது?

(A) பாண்டியர் காலம் **(B) பல்லவர் காலம்** (C) சேரர் காலம் (D) சோழர் காலம்

77. கற்களை ஒன்றொடு ஒன்றாக அடுக்கி அமைக்கும் கோயிற்பணி யாருடைய காலத்திலும், இந்நாளிலும் தொடர்ந்து நிலவி வருகிறது?

(A) பல்லவர் மற்றும் சோழர் (B) பாண்டியர் மற்றும் சோழர்

**(C) பல்லவர் மற்றும் பாண்டியர்** (D) சோழர்கள்

78. தந்தச் சிற்பக் கலை யாருடைய காலத்தில் சிறப்புப் பெற்றிருந்தது?

(A) பாண்டியர் (B) விசயநகர நாயக்கர் (C) பல்லவர் (D) **நாயக்க மன்னர்கள்**

79. சிறிய அளவில் உள்ள தந்த சிற்பங்கள் எங்கு நிரம்ப காணப்படுகிறது?

(A) திருவரங்கம் **(B) அழகர்கோயில்** (C) சிதம்பரம் (D) திருபுவனம்

80. ஆகம நூல்களில் குறிக்கப்பட்டுள்ளது போன்று செப்புத் திருமேனிகள் செய்த காலம்

(A) பல்லவர்கள் (B) பாண்டியர்கள் **(C) சோழர்கள்** (D) நாயக்கர்கள்

81. ---------------ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ்நாட்டில் செப்புப்படிம கலை மிக உன்னத நிலையில் வளர்ச்சி அடைந்துள்ளது

(A)2500 (B) **2800** (C) 3500 (D) 2000

82. கோயில்களில் கோபுரம் அமைத்தல் உன்னதநிலை அடைந்த காலம்

(A) பாண்டியர் (B) பல்லவர் **(C) விசயநகர மன்னர்** (D) சோழர்கள்

83. தனித்தனி குன்றுகளை செதுக்கி கோயிலாக்கும் முறை எந்த நூற்றாண்டுடன் நின்று விட்டது?

**(A) கி.பி.8ம் நூற்றாண்டு** (B) கி.பி.9ம் நூற்றாண்டு

(C) கி.பி.11ம் நூற்றாண்டு (D) கி.பி.7ம் நூற்றாண்டு

84. தனித்தனி குன்றுகளை செதுக்கி கோயிலாக்கும் முறை யாருடைய காலத்தில் இருந்தது?

**(A) பல்லவர், பாண்டியர்** (B) பல்லவர் மட்டும்

(C) பல்லவர், சோழர் (D) சேர, சோழர்

85. பிரித்தெழுதுக: ஆகமம்

(A) அம் +கம **(B) ஆ + கமம்** (C) ஆ +அம் (D) ஆக +அம்

86. ஆகமங்களின் எண்ணிக்கை

**(A) 28** (B) 29 (C) 27 (D) 26

87. ஆகமங்களின் வகைகள்

(A) 3 (B) **2** (C) 4 (D) 5

88. இறைவனின் எத்தனை முகங்களிலிருந்து 28 ஆகமங்கள் தோன்றும்

(A) 7 (B) 6 (C) **5** (D) 4

89. இறைவனின் எந்த முகத்திலிருந்து அதிக ஆகமங்கள் தோன்றுகிறது

**(A) ஈசான** (B) அகோர (C) சத்யோஜாத (D) வாமதேவ

90. பத்து ஆகமங்களைக் கொண்ட பேதம்

(A) கிரியாபேதம் (B) ருத்ர பேதம் (C) சரியா பேதம் **(D) சிவபேதம்**

91. ருத்ர பேதம்

(A) 13 ஆகமங்கள் (B) 10 ஆகமங்கள் **(C) 18 ஆகமங்கள** (D) 12 ஆகமங்கள்

92. சரியானதைத் தேர்ந்தெடு:

**(A) சரியை – பூஜைக்குரிய பொருட்கள் சேகரிக்கிறது**

(B) கிரியை – பூஜை முறைகளை பதி, பசு, பாசம் கூறுகிறது

(C) யோகம் – கர்ஷணம் முதல் பிரதிஷ்டயை வரை

(D) ஞானம் – ஆனம சுத்தி, அந்தர் யாகம்

93. ஸ்ரீமந் நாராயணனாகிய விஷ்ணுவை பரதேவதையாகக் கூறும் ஆகமம்

(A) பாஞ்சராத்ராகமம் (B) **வைணவவாகமம்** (C) வைகானஸாகமம் (D) B&C

94. பல ரிஷிகளின் மூலம் உபதேசிக்கப்பட்டவை

**(A) பாஞ்சராத்ராகமம்** (B) வைகானஸாகமம் (C) A&B (D) எதுவுமில்லை

95. விகனஸர் மூலம் உபதேசிக்கப்பட்டவை

**(A) வைகானஸாமம்** (B) பாஞ்சராத்ராகமம் (C) A&B (D) எதுவுமில்லை

96. பாஞ்சராத்ராகமம் மூலம் பூஜை நடைபெறும் ஆலயங்களில் பொருந்தாதவை

(A) காஞ்சிபுரம் (B) திருநாராயணபுரம் (C) ஸ்ரீரங்கம் (D) **திருப்பதி**

97. கர்ஷணம் என்பதன் பொருள்

**(A) உழுதல்** (B) கருணை (C) அன்பு (D) விதைத்தல்

98. ஒவ்வொரு வேதமும் இரண்டு பகுதிகளைக் கொண்டது

(A) தவறு **(B) சரி**

(C) சரியும் இல்லை, தவறும் இல்லை (D) சரியாகவும் இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம்

99. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க:

| பட்டியல் I | பட்டியல் II | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. சிவஞான போதம் | - 1. மகாவீரர் | (A) | 2 | 4 | 3 | 1 |
| b. புத்த மதம் | - 2. பதஞ்சலி | **(B)** | **3** | **4** | **2** | **1** |
| c. யோக தரிசனம் | - 3. மெய்கண்ட தேவ நாயனார் | (C) | 4 | 2 | 3 | 1 |
| d. சமணம் | - 4. புத்தர் | (D) | 1 | 2 | 3 | 4 |

100. உபநிடதங்கள் ஒரு புதிய சமய நோக்கு கொண்டது. இது

(A) வினை முறைகள், வேள்வி முறைகளை ஆதரிக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை

**(B) வினை முறைகள், வேள்வி முறைகளை ஆதரித்தது**

(C) வினை முறைகள், வேள்வி முறைகளை ஆதரிக்கவில்லை

(D) வினை முறைகள், வேள்வி முறைகளை தேவையான அளவு ஆதரித்தது

101. கொடுக்கப்பட்ட கூற்றுக்களை கவனிக்கவும்.

I. இராமன் எதிர்த்து நின்று போர்புரியின் வாலி சரணடைவான்

II. அப்படியெனில் இராமனால் சுக்ரீவனுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது

III. எனவே இராமன் வாலியை மறைந்து நின்று கொல்ல நேர்ந்தது

இவற்றுள்:

**(A) III ம் தொடர் முதல் இரண்டு தொடர்களின் மூலம் கிடைக்கும் விளக்கம்**

(B) I மற்றும் II தொடர்கள் உண்மை. ஆனால் III-வது சரியான விளக்கம் அல்ல

(C) I ஐயமே, எனவே II மற்றும் III உண்மையல்ல

(D) III - ம் தொடர் சரி, ஆனால் I மற்றும் II உண்மையல்ல

102. விக்கிரங்களிலுள்ள அழுக்கு நீங்குதற் பொருட்டு பட்டை, தளிர், மண் இவைகளை கொண்டு தேய்த்து செய்யும் அபிசேகத்தின் பெயர்

(A) பிம்ப சுத்தி (B) மந்திர சுத்தி **(C) இலிங்க சுத்தி** (D) ஸ்தான சுத்தி

103. கீழ்க்கண்ட தலங்களில் ஒன்று காசிக்கு நிகரானதல்ல

(A) திருவெண்காடு (B) திருவையாறு **(C) புளியங்குடி** (D) திருவிடைமருதூர்

104. நாத்திகம் என்ற சொல்

**(A) கடவுள் நம்பிக்கை அற்றவன் என்று பொருள்படும்**

(B) மறுபிறப்பின் நம்பிக்கை இல்லாதவர்கள் எனப் பொருள்படும்

(C) வேதங்களின் மீது நம்பிக்கை இல்லை எனப் பொருள்படும்

(D) புராணங்கள் மீது நம்பிக்கை இல்லை எனப் பொருள்படும்

105. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. கஜமுகி | - 1. மோகம் | **(A)** | **3** | **1** | **2** | **4** |
| b. தாரகன் | - 2. அகங்காரம் | (B) | 1 | 2 | 4 | 3 |
| c. சூரன் | - 3. சஞ்சலம் | (C) | 4 | 3 | 2 | 1 |
| d. தேவர்கள் | - 4. பசுக்கள் | (D) | 1 | 4 | 3 | 2 |

106. சைவ சித்தாந்தம் ஆணவம், கருமம், சத்துவம் என்னும் மும்மலங்களைப் பற்றிப் பேசுகிறது. இது

(A) சரி **(B) தவறு**

(C) சரியும் இல்லை, தவறும் இல்லை (D) சரியாகவும் இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம்

107. கொடுக்கப்பட்ட கூற்றுக்களை கவனிக்கவும்.

I. விநாயகர் முதல் கடவுள்

II. விநாயகர் எல்லா கடவுள்களுக்கும் மேலானவர்

III. சிவபெருமானின் முதல் பிள்ளை

IV. விநாயகருக்கு விக்னேசுவரர் என்ற பெயரும் உண்டு

இவற்றுள்:

(A) I மட்டும் சரியானது

(B) I மற்றும் II சரியானவை

(C) I, II மற்றும் IV சரியானவை

**(D) அனைத்தும் சரியானவை**

108. "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்" என்று கூறியவர்

**(A) திருமூலர்**

(B) மாணிக்கவாசகர்

(C) அப்பர்

(D) திருஞானசம்பந்தர்

109. யோகப்பயிற்சியின் பயனாவது

**(A) ஆன்மீக நிலையை அடைய**

(B) சமூக வாழ்க்கையை மேம்படுத்த

(C) அறத்தைக் கடைப்பிடிக்க

(D) உடலைத் தூய்மைப்படுத்த

110. உடலை விட்டு ஆன்மா அல்லது உயிர் பிரிந்தவுடன்

(A) உயிர் அழிந்து விடுகிறது

**(B) உயிர் அழியாமல் புண்ணிய உலகத்திற்கு (சொர்க்கம்) அல்லது இருள் உலகத்திற்கு (நரகம்) செல்கிறது**

(C) உடனே வேறு சரீரத்திற்குள் நுழைந்து விடுகிறது

(D) இவற்றுள் எதுவுமில்லை

111. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க:

| பட்டியல் I | பட்டியல் II | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. அகிம்சை | - 1. திருடாமை | (A) | 2 | 3 | 4 | 1 |
| b. சத்யம் | - 2. ஒழுக்கம் | (B) | 3 | 4 | 2 | 1 |
| c. அஷ்டேயம் | - 3. உண்மை பேசுதல் | **(C)** | **4** | **3** | **1** | **2** |
| d. பிரமசர்யம் | - 4. பிற உயிர்க்குத் தீங்கு செய்யாமை | (D) | 2 | 1 | 3 | 4 |

112. நவராத்திரி விழாவின்போது பல்வேறு பெண் தெய்வங்களை வழிபடுவர். அது ஒரு குறிப்பிட்ட வரிசையில் இருக்கும்

**(A) பார்வதி, லட்சுமி, சரஸ்வதி, விஜயதசமி**

(B) பார்வதி, விஜயதசமி, லட்சுமி, சரஸ்வதி

(C) சரஸ்வதி, பார்வதி, லட்சுமி, விஜயதசமி

(D) சரஸ்வதி, விஜயதசமி, பார்வதி, லட்சுமி

113. சஷ்டி விரத விழாவின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க.

| பட்டியல் I | | பட்டியல் II | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. முருகன் | - 1. குரோதம் | | (A) | 4 | 2 | 1 | 3 |
| b. தேவர்கள் | - 2. அகங்காரம் | | **(B)** | **4** | **3** | **2** | **1** |
| c. சூரன் | - 3. பசு | | (C) | 3 | 4 | 2 | 1 |
| d. சிங்கமுகம் | - 4. பதி | | (D) | 1 | 4 | 3 | 2 |

114. கொடுக்கப்பட்ட கூற்றுக்களை கவனிக்கவும்.

I. சிவராத்திரி தமிழ் மாதமாகிய மாசியில் நடைபெறும்

II. சிவராத்திரியன்று சிவாலயங்களில் இரவு நாலு கால பூஜை நடைபெறும்

III. சிவராத்திரியை விழாநிசி, பிரம்ம சொரூபம் என்றும் கூறுவர்

IV. சிவராத்திரியன்று திருமாலடியவர்கள் உபவாசம் இருப்பர்

இவற்றுள்:

(A) I மற்றும் II சரியானவை
(B) I மற்றும் III சரியானவை
**(C) I, II மற்றும் III சரியானவை**
(D) அனைத்தும் சரியானவை

115. இந்துக்களின் புராணங்களில், பாம்பு ஒன்றை கயிறாக மலையில் சுற்றித் தேவர்கள் பாற்கடலை கடைந்தனர். அந்த பாம்பின் பெயர்

(A) மந்த்ரா
**(B) வாசுகி**
(C) மேனகை
(D) கற்பகம்

116. தென்திசைக் கயிலை என்பது

(A) சிதம்பரம், இராமேஸ்வரம்
**(B) திருக்காளத்தி, திருச்சிராப்பள்ளி, திருக்கோணமலை**
(C) திருச்செந்தூர், இராமேஸ்வரம்
(D) திருச்சிராப்பள்ளி, இராமேஸ்வரம்

117. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க.

| பட்டியல் I தத்துவமேதைகள் | பட்டியல் II பிரிவுகள் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. சங்கரர் | - 1. சிவாத்துவைதம் | **(A)** | **3** | **2** | **4** | **1** |
| b. இராமானுஜர் | - 2. விசிட்டாத்துவைதம் | (B) | 2 | 3 | 4 | 1 |
| c. மத்வர் | - 3. அத்வைதம் | (C) | 4 | 2 | 1 | 3 |
| d. நீலகண்டர் | - 4. துவைதம் | (D) | 1 | 3 | 2 | 4 |

118. உயிர் (பசு) வர்க்கத்தை மூன்று வகைப்பட வைத்து கூறுவது சைவ மரபு. அவை

I. சகலர்
II. பிரளயாகலர்
III. விஞ்ஞானகலர்
IV. இருமலத்தார்

இவற்றுள்:

(A) I, III மற்றும் IV
(B) II, III மற்றும் IV சரியானவை
**(C) I, II மற்றும் III சரியானவை**
(D) I மற்றும் IV சரியானவை

Kalai IAS Academy
சாதனையாளர்களின் சரித்திர கூடம்

119. வைணவம் சார்ந்திருக்கும் நூல்கள்

(A) வேதங்கள் (B) ஆகமங்கள்

(C) புராணங்கள் மற்றும் பிரபந்தங்கள் **(D) இவை அனைத்தும்**

120. சைவ சமயம் ஒரு சிறந்த சமயம், ஏனெனில்

(A) எவ்வுயிர்க்கும் அன்பாய் இருத்தல் என பகர்கிறது

**(B) எந்த சமயத்தையும் குறை கூறாமல் தன் கருத்துக்களை முன் வைத்து ஆன்ம நெறியை உணர்த்துகிறது**

(C) வழிபாட்டு முறைகள் அனைவராலும் கடைபிடிக்க முடியும் என்கின்றது

(D) எவரும் வீடுபேறு அடைய முடியும் எனக் கூறுகிறது

121. கீழ்க்கண்ட சொற்றொடர்களை ஆராய்க.

I. முடிந்த உண்மைப் பொருள் ஒன்றேயான பிரம்மமே

II. முடிந்த உண்மைப் பொருள் இறை, உயிர், தளை ஆகிய மூன்றும்

III. முடிந்த உண்மை விசிட்டமாய் உள்ள பிரம்மமே

IV. முடிந்த உண்மை பொருள் கடவுள் மற்றும் உயிர்

**(A) II மட்டும்** (B) II மற்றும் IV (C) I, II, III மற்றும் IV (D) I மற்றும் IV

122. சமயம் என்பது

**(A) பேரின்பத்தை மக்கள் அடைய ஒரு வழியே** (B) சடங்குகள்

(C) தத்துவம் (D) இவை அனைத்தும்

123. பகவத்கீதை வலியுறுத்தும் "நிஷ்காமகர்மா" என்ற சொல்

(A) தீமைகளை அழித்து நன்மை விளையச் செய்தால் கடவுளுடன் ஒன்ற முடியும் என்பதைக் குறிக்கும்

(B) அடுத்த பிறவியில் நன்னிலை அடைய தருமம் செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கிறது

**(C) எந்த வித பிரதிபலனையும் எதிர்பாராமல் தன் கடமைகளை செய்தலைக் குறிக்கிறது**

(D) கடவுள் இருப்பிடத்தை அடைய நற்செயல்களில் ஈடுபடுதலைக் குறிக்கிறது

124. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க:

| பட்டியல் I | பட்டியல் II | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆசிரியர் | நூல்கள் | | a | b | c | d |
| a. குமரகுருபரர் | - 1. தேவாரம் | **(A)** | **3** | **4** | **2** | **1** |
| b. நக்கீரர் | - 2. கந்தர் அந்தாதி | (B) | 3 | 2 | 1 | 4 |
| c. அருணகிரியார் | - 3. மதுரைகலம்பகம் | (C) | 4 | 2 | 1 | 3 |
| d. சம்பந்தர் | - 4. திருமுருகாற்றுப்படை | (D) | 2 | 1 | 3 | 4 |

125. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க.

| பட்டியல் I<br>தோற்றுவித்தவர் | | பட்டியல் II<br>தத்துவப்பிரிவு | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. பிருகஸ்பதி | - | 1. சாங்கியம் | **(A)** | **2** | **1** | **4** | **3** |
| b. கபிலன் | - | 2. உலகாயதம் | (B) | 2 | 3 | 4 | 1 |
| c. கணாதன் | - | 3. மீமாம்ஸம் | (C) | 3 | 4 | 2 | 1 |
| d. ஜைமினி | - | 4. வைசேடிகம் | (D) | 4 | 3 | 2 | 1 |

126. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் நம்பி ஆரூரார் என்னும் இம்மூவர்கள் அருளிச் செய்த திருப்பதிகங்கள்:

I. தேவாரம்

II. மூவர் தமிழ்

III. திருவாசகம்

IV. திருத்தொண்டத்தொகை

இவற்றுள்

(A) அனைத்தும் சரியானவை **(B) I மற்றும் II சரியானவை**

(C) I மற்றும் IV சரியானவை (D) II மற்றும் III சரியானவை

127. கீழ்க்காணும் தொடர்களை ஆராய்க.

I. அது, இன்னது என அறியவாராமையின், அதனை சூன்யம் என்றனர் புத்தர்

II. உடம்பையே யான் என வழங்கி வருதலின் உடம்பே அது என்றனர் உலகவாதிகள்

III. சிந்தித்தல், துணிதல், வேதனைபடல் என்னும் தொழிற்பாடுள்ள உள்ளமே அது என்றனர்

இங்கு 'அது' எனப்படுவது

(A) சிவன் (B) பிரம்மன் **(C) ஆன்மா** (D) உலகம்

128. கீழ்க்காணும் தொடர்களை ஆராய்க.

I. அது சிவஞான போதத்தின் வழி நூல்

II. அது, அருணந்தி சிவனாரால் அருளிச் செய்தது

III. அது பரபக்கம், சுபக்கம் என இரண்டு பெரும் பகுதிகளை உடையது

அது:

(A) தேவாரம் **(B) சிவஞான சித்தியார்** (C) திருவாசகம் (D) உண்மை விளக்கம்

129. 'முக்கிய உபநிடதங்களின் முடிவு பிரம்மம் ஒன்றே உட்பொருள், உலகம் பிரம்மத்தின் தோற்றமே' என்ற கொள்கையுடையவர்

(A) இராமானுஜர் **(B) சங்கரர்** (C) மத்வர் (D) பெரியாழ்வார்

130. ஆலயம் கட்டுவதற்கான நிர்மானங்களின் எண்ணிக்கை

(A) 6 **(B) 4** (C) 5 (D) 3

Kalai IAS Academy சாதனையாளர்களின் சரித்திர கூடம்

131. துணிபுரை (A) : எல்லா உலகிற்கும் நிமித்த காரணமாகிய இறைவன் ஐந்து தொழில்களை நடத்தி வருகிறான்

காரணம் (R) : இறைவன் ஐந்து தொழில்களையும் செய்ய வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது

**(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்**

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

(C) (A) சரி ஆனால் (R) தவறு

(D) (A) தவறு ஆனால் (R) சரி

132. துணிபுரை (A) : 'குருஸ்தானம்' முக்கிய அம்சமாக இந்து சமயம் கருதுகிறது

காரணம் (R) : மாணவர்கள் செய்த பாவங்களின் விளைவை குருவானவர் ஏற்றுக் கொள்கிறார்

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

**(C) (A) சரி ஆனால் (R) தவறு**

(D) (A) தவறு ஆனால் (R) சரி

133. எது சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது என கண்டுபிடி.

**(A) பிராமின் - கல்வியாளர்கள்**

(B) சத்ரியன் - வியாபாரிகள்

(C) வைஸ்யன் - விவசாயிகள்

(D) சூத்ரா - போர்புரிபவர்கள்

134. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க.

| பட்டியல் I ஆசிரியர் | | பட்டியல் II நூல்கள் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. மெய்கண்ட தேவர் | - | 1. சிவஞான சித்தியார் | **(A)** | **4** | **1** | **2** | **3** |
| b. அருணந்தி சிவாச்சாரியார் | - | 2. சிவப்பிரகாசம் | (B) | 1 | 2 | 3 | 4 |
| c. உமாபதி சிவம் | - | 3. திருவந்தியார் | (C) | 4 | 2 | 3 | 1 |
| d. திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் | - | 4. சிவஞானபோதம் | (D) | 4 | 3 | 2 | 1 |

135. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க.

| பட்டியல் I ஆசிரியர் | | பட்டியல் II நூல்கள் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. பேயாழ்வார் | - | 1. திருப்பாவை | **(A)** | **2** | **3** | **4** | **1** |
| b. நம்மாழ்வார் | - | 2. மூன்றாந்திருவந்தாதி | (B) | 2 | 4 | 3 | 1 |
| c. குலசேகராழ்வார் | - | 3. திருவாய்மொழி | (C) | 4 | 3 | 2 | 1 |
| d. ஆண்டாள் | - | 4. முகுந்த மாலை | (D) | 1 | 2 | 3 | 4 |

136. ஞானத்தை கொடுத்து பாவத்தை நீக்குவது

**(A) தீக்ஷா (தீக்கை)** (B) சரியை (C) கிரியை (D) மலங்கள்

137. நாம் காணும் இவ்வுடலில் ஓர் நுண்ணுடல் உள்ளது. அது ------------ எனப்படும்

(A) சூச்சும சரீரம் (B) யாதனா சரீரம் (C) ஆவி **(D) இவை அனைத்தும்**

138. முருகு என்பதன் பொருள்

(A) இளமை (B) அழகு (C) நறுமணம் **(D) இவை அனைத்தும்**

139. பொன்னம்பலம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த நூல்

(A) திருக்குறள் (B) பகவத்கீதை

**(C) திருமுறைகளில் உள்ள சில பாடல்கள்** (D) இவை அனைத்தும்

140. விபூதி என்பதன் பொருள்

**(A) பூதி** (B) பஸ்மன் (C) க்ஷாரம் (D) இவை அனைத்தும்

141. பசு என்பது

(A) பால் தரும் மிருகம் **(B) ஆன்மா** (C) உந்துவண்டி (D) இவற்றுள் எதுவுமில்லை

142. சக்தியை வழிபடும் சமயம்

**(A) சாக்தம்** (B) வைணவம் (C) அத்வைதம் (D) புத்தம்

143. உபநிடதம் என்பதின் பொருள்

**(A) ஆசாரியன் அருகில் அமர்ந்து அறிந்து கொள்ளப்படும் ஞானம்**

(B) அறிவு

(C) பிரம்மன்

(D) இவை அனைத்தும்

144. அன்பிற்கு அடிப்படை

(A) மதம் **(B) அஹிம்சை** (C) கடவுள் (D) காமம்

145. அத்வைத தரிசனத்தின் பிரபலமான ஆசிரியர்

(A) இராமானுஜர் **(B) சங்கரர்** (C) பதஞ்சலி (D) கபிலர்

146. ‘யோகம்’ என்ற சொல்லின் பொருள்

(A) அறிவு (B) தரிசனம்

**(C) ஒன்றாதல் அல்லது இணைதல்** (D) அறம்

147. கீழ்க்கண்டவற்றுள் எது சரியான வரிசை:

(A) விலங்கு, மனிதர், தேவர், தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, பறவை

**(B) தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்**

(C) தாவரம், விலங்கு, தேவர், மனிதர், ஊர்வன, நீர்வாழ்வன, பறவை

(D) தேவர், விலங்கு, மனிதர், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்

148. ‘வைணவம்’ என்ற சொல்

(A) சிவ சம்பந்தம் உடையது **(B) விஷ்ணு சம்பந்தம் உடையது**

(C) பௌத்தம் சம்பந்தம் உடையது (D) எதனோடும் சம்பந்தமில்லை

Kalai IAS Academy
சாதனையாளர்களின் சரித்திர கூடம்

149. கந்தர் சஷ்டியின் முக்கியத்துவம்

**(A) ஆணவ மலம் முக்தி அடைந்த பிறகும் அழியாது நிற்பது**

(B) ஆன்மாவின் விடுதலை

(C) தீயவை அழிதல்

(D) ஆனந்த நிலையை அடைதல்

150. தீட்சை என்ற சடங்கு நடைபெறுவது

**(A) ஒரு சீடனை ஆன்மீகப் பாதையில் அறிமுகப்படுத்த** (B) ஒரு குழந்தைக்கு திட உணவு வழங்க

(C) ஒரு குழந்தைக்கு பெயரிட (D) ஒரு குழந்தைக்கு எழுத்துக் கற்றுத்தர

151. சிரார்த்தம் செய்வதற்குரிய நாளாகக் கருதப்படுவது

I. இறந்தநாள்

II. வருடப்பிறப்பு

III. அமாவாசை

IV. பௌர்ணமி

இவற்றுள்:

(A) I சரியானது (B) I மற்றும் II சரியானவை

**(C) I, II மற்றும் III சரியானவை** (D) அனைத்தும் தவறானவை

152. திருவிழாக்கள் கடவுளின் தொழில்களை உள்ளடக்கியதாகக் கொண்டாடப்படுகிறது. இக்கூற்று

(A) தவறு **(B) சரி**

(C) சரியும் இல்லை, தவறும் இல்லை (D) சரியாகவும் இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம்

153. இராமானுஜரின் விசிஷ்டாத்துவைத கொள்கைப்படி பாஷ்யம் எழுதிய நூல்

(A) பிரம்மசூத்திரம் (B) பகவத்கீதை

**(C) இவை இரண்டுமே** (D) இவற்றுள் எதுவுமில்லை

154. இந்துக்கள் நடத்தும் சடங்குகளில் எது முதலில் செய்யப்படுகிறது என்பதை வரிசைப்படுத்தி எதில் கொடுக்கப்பட்டுள்ளது எனக் கண்டுபிடி.

(A) பும்ஸவனம், சீமந்தம், அன்னப்பிரகன்னம், நாமகரணம்

(B) சீமந்தம், அன்னப்பிரகன்னம், நாமகரணம், பும்ஸவனம்

(C) சீமந்தம், பும்ஸவனம், நாமகரணம், அன்னப்பிரகன்னம்

**(D) பும்ஸவனம், சீமந்தம், நாமகரணம், அன்னப்பிரகன்னம்**

155. சைவர்கள் கோயிலுக்குள் செல்லும் பொழுது நாமம், துளசி மாலை முதலியவற்றை தரித்துக் கொள்ள வேண்டும். இக்கூற்று

(A) சரி **(B) தவறு** (C) ஐயம் (D) இவற்றுள் எதுவுமில்லை

156. அம்பலவன் அடியார்க்கு எளியவனாய் விளங்குகிறான் என்பதை உணர்த்தும் வரிகள்

(A) நந்தனாருக்கு காட்டிய பேரன்பு

(B) சேரமானுக்கு சிலம்பொலி காட்டி அருளியது

(C) சேக்கிழாருக்கு ‘உலகெலாம்’ என அடியெடுத்து கொடுத்தமை

**(D) இவை அனைத்தும்**

157. மும்மலர்களில் ஒன்றான ஆணவம் உயிர்களை ஒட்டியுள்ளது. அதை கீழ்க்கண்ட தொடர்களில் ஒன்றோடு ஒப்பிடுவர். அது

**(A) உயிர்கள் தோறும் செம்பில் களிப்பு போல் சேர்ந்திருப்பது**

(B) அரிசியை பொருந்தி நிற்கும் தவிடு போல

(C) நெல்லிலிருந்து தோன்றும் முளைப் போல

(D) அரிசியை பொருந்தி நிற்கும் உமி போல

158. பஞ்சராத்திர சாஸ்திரங்கள் என்பது

(A) சிவனைப் பற்றிய புராணங்கள்

**(B) நாராயண புராணம்**

(C) ஆலயம் நிர்மானித்தல் பற்றியது

(D) மனிதனின் கர்மாக்களைப் பற்றிய நூல்

159. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க.

| பட்டியல் I | பட்டியல் II | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. விஷ்ணு மூல மந்திரம் | - 1. ஓம் சரவணபவாய நம | **(A)** | **2** | **3** | **1** | **4** |
| b. சாஸ்தா மூல மந்திரம் | - 2. ஓம் நமோ நாராயணாய நம | (B) | 2 | 4 | 1 | 3 |
| c. சுப்பிரமணியர் மூல மந்திரம் | - 3. ஓம் சாஸ்த்ரு மூர்த்தயே நம | (C) | 1 | 3 | 4 | 2 |
| d. தேவி மூலமந்திரம் | - 4. ஓம் உமா தேவ்யை நம | (D) | 4 | 3 | 2 | 1 |

160. மானஸ ஜபம் என்பதன் பொருள்

(A) தனக்கு மட்டும் கேட்கும் வண்ணம் மெல்ல உச்சரிப்பது

**(B) மனத்திற்குள் உச்சரிப்பது**

(C) பிறர் அறிய உச்சரிப்பது

(D) இவற்றுள் எதுவுமில்லை

161. காயத்ரி மந்திரம் ஜபிப்பதால்

I. பாபங்கள் அழியும்

II. சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் எனும் வினைகள் ஒழியும்

III. விதேக கைவல்ய பதவி கிடைக்கும்

IV. பிறப்பறும்

(A) I மற்றும் II சரியானவை

(B) I, II மற்றும் III சரியானவை

**(C) அனைத்தும் சரியானவை**

(D) அனைத்தும் தவறானவை

162. ஆனி உத்திரத்தின் வேறு பெயர்

(A) பும்ஸவனம்

(B) நிஷ்க்ராமணம்

**(C) திருமஞ்சனம்**

(D) சைத்ரோத்ஸவம்

163. திருத்துறையூரில் அவதரித்தவர்

**(A) அருணந்தி சிவாச்சாரியார்**

(B) தொண்டரடிப்பொடி ஆழ்வார்

(C) மெய்கண்ட தேவர்

(D) மறைஞான சம்பந்தர்

Kalai IAS Academy
சாதனையாளர்களின் சரித்திர கூடம்

164. முதலாழ்வார்கள் மூவரும் தாயின் வயிற்றில் பிறவாது மலர்களில் தோன்றியவர்கள்

(A) தவறு **(B) சரி**

(C) சரியும் இல்லை, தவறும் இல்லை (D) இவற்றுள் எதுவுமில்லை

165. ஹரப்பாவில் கிடைத்த புதை பொருள்களை ஆராய்ந்து அறிக்கை வெளியிட்ட சர் ஜான் மார்ஷல் எந்நாட்டவர்?

(A) பிரான்சு **(B) இங்கிலாந்து** (C) செருமணி (D) அமெரிக்கா

166. வடமொழியில் மிகப்பழமை வாய்ந்த பாடல்கள் எதில் உள்ளது?

(A) யஜுர் வேதம் (B) சாம வேதம் **(C) ரிக் வேதம்** (D) அதர்வண வேதம்

167. பேயாழ்வார் பிறந்த இடம்

(A) மதுரை (B) திருநெல்வேலி **(C) திருமயிலை** (D) திருக்குற்றலாம்

168. தென்முகக் கடவுள் என குறிப்பிடப்படும் இறைவன்

(A) கணபதி (B) விஷ்ணு **(C) தக்ஷிணாமூர்த்தி** (D) ஆஞ்சநேயர்

169. பௌத்த சமயம் இரு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை

**(A) ஹீனயானம், மகாயானம்** (B) ஸ்வெதாம்பரர், திகம்பரர்

(C) பூர்வ பௌத்தம், அபூர்வ பௌத்தம் (D) இவற்றுள் எதுவுமில்லை

170. வித்யாரம்பம் என்னும் சடங்கு

(A) குழந்தை பிறந்தவுடன் செய்ய வேண்டியது

(B) குழந்தைக்கு பெயர் இடும் பொழுது செய்வது

(C) குழந்தைக்கு முதன் முதலாக அன்னம் ஊட்டும் பொழுது செய்தல்

**(D) குழந்தை முதன் முதலில் பள்ளிக்குச் செல்லும் பொழுது செய்வது**

171. துணிபுரை (A) : நாராயணர் யுகங்கள் தோறும் அவதார மெடுப்பார்

காரணம் (R) : அதர்மம் தலை தூக்கும் பொழுதும் நல்லோர்க்கு துஷ்டர்களால் இடையூறுகள் உண்டாகும் பொழுதும் நாராயணர், நல்லவர்களைக் காத்தும், தர்மத்தை நிலை நிறுத்தவும், அவதாரமெடுப்பார்.

**(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்**

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

(C) (A) சரி ஆனால் (R) தவறு

(D) (A) தவறு ஆனால் (R) சரி

172. இறை ஆன்ம உறவை விசட்டாத்துவைதம் எவ்வாறு அழைக்கிறது?

(A) உடல் ஆன்ம உறவு (B) சேஷா - சேஷி உறவு

**(C) ஆதார - ஆதேய உறவு** (D) இவை அனைத்தும்

173. சாங்கியத்தைத் தோற்றுவித்தவர்

(A) கணாதன் (B) அக்கபாதன் **(C) கபிலன்** (D) கௌதமர்

174. பிரபஞ்சத்தில் ஒரு நிலையான அறத்தத்துவம் உள்ளது. அது

(A) ரிதா (B) பக்திக் கொள்கை

**(C) இவை இரண்டுமே** (D) இவற்றுள் எதுவுமில்லை

175. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க.

| பட்டியல் I | பட்டியல் II | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. அருத்தம் | - 1. வீடுபேறு | (A) | 1 | 4 | 3 | 2 |
| b. காமம் | - 2. பொருள் | (B) | 3 | 4 | 2 | 1 |
| c. தருமம் | - 3. புலனின்பம் | **(C)** | **2** | **3** | **4** | **1** |
| d. மோட்சம் | - 4. நன்னெறி | (D) | 1 | 3 | 4 | 2 |

176. பஞ்ச பூதங்கள் என்பது

(A) அஹிம்சை, சத்தியம், அஸ்டேயம், பிரம்மசர்யம்

(B) அர்த்தம், கர்மம், காமம், தர்மம், மோட்சம்

**(C) நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்**

(D) நன்னடத்தை, நற்செயல், நல்அறிவு, நல்லெண்ணம், நல்நோக்கு

177. சாருவாக தரிசனம் ஏற்றுக் கொண்டுள்ள மனித மதிப்பீடு

(A) அருத்தம் (B) காமம்

**(C) இவை இரண்டுமே ஏற்றுக் கொண்டுள்ளது** (D) இவற்றுள் எவற்றையும் ஏற்றுக் கொள்ளவில்லை

178. மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகம்

(A) பன்னிரண்டாம் திருமுறை **(B) எட்டாம் திருமுறை**

(C) முதலாம் திருமுறை (D) ஆறாம் திருமுறை

179. செம்பிய அரசன் எந்த நாட்டைச் சேர்ந்தவன்?

**(A) சேர நாடு** (B) சோழ நாடு (C) பாண்டிய நாடு (D) இவற்றுள் எதுவுமில்லை

180. சைவ சித்தாந்தத் தத்துவங்களின் எண்ணிக்கை

(A) 24 **(B) 36** (C) 56 (D) 64

181. விசிட்டாத்துவைதம் எதை ஏற்றுக் கொள்கிறது?

(A) சீவன் முக்தி (B) விதேக முக்தி

**(C) இவை இரண்டுமே** (D) இவற்றுள் எதுவுமில்லை

182. வைணவத்தின் கடவுள்

(A) பொருள் காரணம் **(B) நிமித்த காரணம்**

(C) இவை இரண்டுமே (D) இவற்றுள் எதுவுமில்லை

183. பழநி

**(A) சைவத்திருத்தலம்** (B) வைணவத்திருத்தலம்

(C) இவை இரண்டுமே (D) இவற்றுள் எதுவுமில்லை

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

184. சைவத்தில் பிரமஞானம் என்பது

(A) பாசஞானம்
(B) பசுஞானம்
**(C) பதிஞானம்**
(D) இவை அனைத்தும்

185. அஷ்டபந்தனம் என்பது

(A) அசுத்தத்தை நீக்கும் பொருட்டு செய்யப்படுவது
(B) கும்பாபிஷேகம்
**(C) ஆலயங்களை புனர்நிர்மாணம் செய்து எட்டு சக்திகளோடு இறைவனை இணைப்பது**
(D) ஆலயங்கள் புதிதாக கட்டி இறைவனை பிரதிஷ்டை செய்வது

186. உருத்திரராட்ஷசம் என்பது

**(A) சம்ஸார துக்கத்தை இல்லாமல் செய்வது**
(B) கர்மாக்களை அழிப்பது
(C) நோய்களை அகற்றுவது
(D) சந்தனம்

187. வேதங்கள் இறைவனை எவ்வாறு அழைக்கின்றன?

(A) விச்சுவாதிகள்
(B) விஸ்வகாரணன்
(C) விச்சுவாந்தர்யாமி
**(D) இவை அனைத்தும்**

188. அத்வைத வேதாந்தம் ஏற்றுக் கொண்டுள்ள பிரமாணங்களின் எண்ணிக்கை

(A) 2
(B) 3
**(C) 4**
(D) 6

189. விஷ்ணுவை 'முக்கண் அப்பா' என்று போற்றியவர்

(A) பேயாழ்வார்
(B) பூதத்தாழ்வார்
**(C) நம்மாழ்வார்**
(D) பொய்கை ஆழ்வார்

190. உமாபதி சிவாசாரியர் எழுதிய நூல்களில் ஒன்று திருக்குறள் போன்று குறள் வெண்பாக்களால் ஆனது. அது

(A) சிவப்பிரகாசம்
**(B) திருவருட்பயன்**
(C) வினா வெண்பா
(D) கொடிக்கவி

191. அபரக்கிரியை என்பது

(A) மனிதன் பிறக்கும் போது செய்யப்படும் சடங்கு
**(B) மனிதன் இறந்த பிறகு அவனது ஆன்மா நலம் அடையச் செய்யும் கிரியை**
(C) திருமணத்தின் போது செய்யப்படும் சடங்கு
(D) இவை அனைத்தும்

192. பிரஸ்தான திரயம் எனக் கூறப்படும் நூல்கள்

(A) உபநிடதங்கள்
(B) பிரம்மசூத்திரம்
(C) பகவத்கீதை
**(D) இவை அனைத்தும்**

193. யோக தர்சனத்தில் முக்தியின் நிலையை எவ்வாறு குறிப்பிடுவர்

(A) அட்டமாசித்திகளைப் பெற்றிருப்பது
(B) நான் யார் என்பதை உணர்ந்திருப்பது
**(C) கடவுளுடன் ஐக்கியமாவது**
(D) உயர்ந்த ஞானத்தைப் பெற்றிருப்பது

194. ஸ்ரீபாஷ்யம் இயற்றியவர்

(A) சங்கரர் (B) இராமானுஜர் (C) மத்வர் **(D) வேதாந்த தேசிகர்**

195. தமிழ் மாதம் மாசியில் திரயோதசி, சதுர்த்தசி இரண்டினுடைய சேர்க்கையானது

**(A) சிவராத்திரி** (B) சிவயோகம் (C) நவராத்திரி (D) தைப்பூசம்

196. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த அயல்நாட்டு அறிஞர்

**(A) போப்** (B) மில்டன் (C) கீட்ஸ் (D) வீரமாமுனிவர்

197. சதாபிஷேகம் என்பது

(A) கணபதியை வழிபடும் கிரியை

**(B) எண்பது (அ) எண்பத்து நான்கு ஆண்டுகளில் செய்யும் சடங்கு**

(C) அறுபது ஆண்டுகள் முடிந்த பிறகு தம்பதியர் செய்யும் வழிபாடு

(D) நூறு ஆண்டுகள் வாழ்ந்தவர் செய்யும் வழிபாடு

198. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க.

| பட்டியல் I ஆழ்வார்கள் | பட்டியல் II அம்சம் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. பொய்கை ஆழ்வார் | - 1. வைநதேயர் | (A) | 1 | 2 | 3 | 4 |
| b. மதுரகவி ஆழ்வார் | - 2. சக்ரம் | **(B)** | **3** | **1** | **4** | **2** |
| c. திருமங்கை ஆழ்வார் | - 3. பாஞ்சசன்யம் | (C) | 3 | 2 | 1 | 4 |
| d. திருமழிசை ஆழ்வார் | - 4. சார்ங்கம் | (D) | 2 | 3 | 4 | 1 |

199. ஒவ்வொரு இந்துவுக்கும் பிறப்பதற்கு முன்பும் வாழும் காலத்திலும் சில சடங்குகள் செய்யப்படுகிறது. சரியான வரிசைப்படி அமைந்த விடையை தேர்ந்தெடுக்கவும்.

**(A) ஸீமந்தம், நாமகரணம், வித்யாரம்பம், குருகுலவாசம்**

(B) ஸீமந்தம், வித்யாரம்பம், அன்னபிராசனம், புண்ணியாவாசனம்

(C) உபநயனம், வித்யாரம்பம், புண்ணியாவாசனம்

(D) உபநயனம், புண்ணியவாசனம், ஸீமந்தம், நாமகரணம்

200. கீழ்க்கண்டவற்றில் சாருவாகம் ஏற்றுக்கொள்வது

**(A) நிலம், நீர், காற்று, நெருப்பு** (B) நிலம், நெருப்பு, ஆகாயம், ஆன்மா

(C) நிலம், ஆகாயம், நீர், கடவுள் (D) நிலம், காற்று, ஆன்மா, கடவுள்